அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்.10/2016

தேதி.09.01.2016

# தமிழர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளாத ஜெயராம் ரமேஷ் மன்னிப்புக் கேட்க வேண்டும் ச.ம.க.நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் கண்டனம்

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு பொங்கல் திருநாளில் நடைபெற இருப்பதை நினைத்து தமிழக மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

இந்த சமயத்தில் ஏற்கனவே ஜல்லிக்கட்டுக்கு சட்டப்பூர்வ தடையை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கிய காங்கிரஸ் முன்னாள் மத்திய அமைச்சர் ஜெயராம் ரமேஷ் மீண்டும் ஜல்லிக்கட்டு நடைபெறுவதை காட்டுமிராண்டித்தனம் என்று கூறுவது முட்டாள்தனம். தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக பேசும் ஜெயராம் ரமேஷ் தான் மிகவும் பிற்போக்குத் தனமானவர்.

ஜெயராம் ரமேஷின் கருத்தை காங்கிரஸ் கட்சியின் கருத்து என்று நாம் எடுத்துக் கொள்ளலாமா? என்பதை சோனியா காந்தி தெரிவிக்க வேண்டும்.

ஜெயராம் ரமேஷை காங்கிரஸ் கட்சியிலிருந்து சோனியாகாந்தி நீக்க வேண்டும். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்று தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிராக யார் பேசினாலும் ஒட்டுமொத்த தமிழர்களும் ஒன்று திரண்டு கண்டிக்க வேண்டும். அப்போது தான் நமது உரிமை காக்கப்படும்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.